**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021 – 2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகைக்கு ஏற்ப, விகிதாச்சார அடிப்படையில் 5 சதவீதம் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வழங்கப்படும் நிர்வாக மானியத்துடன் சேர்த்து வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.


---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 19

நாள் 07.03.2022
பிலவ, மாசி 23
திருவள்ளுவர் ஆண்டு 2053
படிக்கப்பட்டது :–

அரசாணை (நிலை) எண்.63, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை, நாள் 03.10.2019.

**ஆணை:–**

2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

"தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நிர்வாக செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டுதோறும் நிர்வாக மானியமாக 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகாயத் தொகை விகிதத்திற்கு ஏற்ப இந்நிர்வாக மானியம் உயர்த்தி வழங்கப்படும்".

2. தமிழ்நாடு வக்ஃப் வாரியம், வக்ஃப் நிறுவனங்களின் செயல்பாடுகளை சீரமைத்தல் மற்றும் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வக்ஃப் வாரியத்திற்கான வருவாயினை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிர்வாகச் செலவுகளை மேற்கொள்ள ஆண்டுதோறும் நிர்வாக மானியம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி மேலே படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிர்வாக மானியம் ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.2.50 கோடியாக 2019-2020-ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, 2022-2023-ஆம் நிதியாண்டு முதல், 2021-2022-ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வசூலிக்கப்பட்ட சகாயத் தொகை அல்லது ரூ.6.64 கோடி (2020-2021-ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட சகாயத் தொகை) இவற்றில் எது அதிகமாக உள்ளதோ அதனை அடிப்படைத் தொகையாக எடுத்துக் கொண்டு, அந்த அடிப்படைத் தொகைக்கு மேல் கூடுதலாக வசூலிக்கப்படும் சகாயத் தொகையில், 5 சதவீதம் ஊக்கத் தொகையாக தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிர்வாக மானியத்துடன் சேர்த்து வழங்கப்படும் என அரசு ஆணையிடுகிறது. மேலும், 5 சதவீதம் கூடுதல் நிர்வாக மானியம் பெற முந்தைய ஆண்டின் (அதாவது 2021-2022) தணிக்கை செய்யப்படாத கணக்குகள் மற்றும் அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளின் (அதாவது 2019-2020 (ம) 2020-2021) தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் ஆகியவற்றை தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.9769/நிதி (பி.மி.பி)/ 2022, நாள் 02.03.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை-1.
பிரிவு அலுவலர் (பட்டியல்),
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9

சம்பள கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை –9.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை–I&II), சென்னை–18.

நகல் :–
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
நிதி(வரவு–செலவு/பொது I, II/பி.மி.பி) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/3/2022
பிரிவு அலுவலர்

7/3/22